O.S. No:73/2017
பெயர்: திருமதி.கௌதமி
**பி.சா. 1**
04-02-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் :03.39**

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

15/07/2016 கிரைய சாசனம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

**வாதி தரப்பில் குறுக்கு விசார**ணை

நான் காவல் துறையில் சேலம் மாவட்டத்தில் 2 ஆம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். என்னுடைய காவலர் எண் 1929 ஆகும். நான் 2013 இல் பணியில் சேர்ந்தேன். நான் அந்த கிரையம் ஏற்பட்ட தேதியில் பணியில் தான் இருந்தேன். அரசு துறையில் பணியில் இருப்பவர்கள் ஒரு சொத்து வாங்கவேண்டும் என்றால் மேல் அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் ஆமாம். அந்த அரசு விதிக்கு நான் கட்டுப்பட்டவர் என்றால் ஆமாம். இந்த சொத்து வாங்குவதற்கு நான் என்னுடைய அலுவலகத்தில் அரசு அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. நான் இந்த சொத்தை வாங்கியதை என்னுடைய Assets and Liabilities Statement இல் கொடுத்தேனா என்றால் இல்லை. 2017 இல் இருந்து நான் பணியில் இல்லை. 16/06/2023 இல் தான் நான் மீண்டும் பணியில் சேர்ந்தேன். இன்னும் நான் Assets and Liabilities Statement தாக்கல் செய்யவில்லை. நான் அரசு நடத்தை விதிமுறைக்கு கட்டுப்பட்டவர் என்றால் ஆமாம். தாவா சொத்து கலியமூர்த்திக்கு தான் சொந்தமானது. கலியமூர்த்தி எந்த வருடம் இறந்தார் என்று ஞாபகமில்லை. இந்த வழக்கை கலியமூர்த்தி தான் ஆரம்பத்தில் தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அவர் இறந்து போனபோது இதே முகவரியில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. அந்த ஊரில் தான் இருந்தார். கலியமூர்த்தி வீட்டு முகவரி எனக்கு தெரியாது. கிரைய பத்திரத்தில் 11,42,500/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. கிரைய பத்திரத்திலேயே ரூபாய் 11,40,000/- நேரில் ரொக்கமாக பெற்றக்கொண்டு என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் வருமானவரி செலுத்தவில்லை. என்னுடைய வருமானத்திற்கு வரி வரவில்லை. நான் இந்த ரூபாய் 11,40,000/- வைத்திருந்ததை அரசிற்கு

காண்பித்தேனா என்றால் இந்த தொகை கணவர் அவருடைய வருமானத்தில் இருந்து என் பெயரில் வாங்கிக்கொடுத்ததாகும் . வா.சா.ஆ.1 இல் என் கணவர் தொகை கொடுத்து இந்த கிரையம் பெறப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரி . 30/11/2016 இல் நான் கலியமூர்த்திக்கு சம்மத கடிதம் எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை. கலியமூர்த்தி வழக்கு தாக்கல் செய்த போது வயதானவர் தான் . என்னுடைய வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் நான்கெல்லையில் வடக்கில் கலியமூர்த்தி என்று உள்ளது . அது இந்த கலியமூர்த்தி தான் என்றால் அவர் கலியமூர்த்தி த /பெ கொளஞ்சியப்பன். அறிவிப்பில் தெற்கு தெரு வண்ணக்குடி என்ற முகவரியில் நான் இல்லையென்று திருப்பட்டுள்ளது என்றால் அப்போது வாழப்பாடி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் . வாழப்பாடி மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்ததை காண்பிக்கக்கூடிய ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய முடியும் . 10/07/2017 இல் அறிவிப்பு வந்த விவரம் எனக்கு தெரியும் . அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை . 18/07/2016 இல் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ரத்து செய்ய கோரி தான் இந்த வழக்கு என்றால் ஆமாம் . 05/08/2017 இல் நான் பணியில் இல்லை . கலியமூர்த்தி உயிருடன் இல்லை. அவருடைய மனைவி அசலாம்பாள் உயிருடன் இருக்கிறார் . கலியமூர்த்திக்கும் அசலாம்பாளுக்கும் குழந்தைகள் இல்லை. கலியமூர்த்தி பின்னர் இந்த வழக்கை நடத்தும் அய்யப்பனை எனக்கு தெரியாது . இந்த வழக்கில் அவர் தரப்பினராக சேர்ந்த பிறகு அவர் யார் என்று நான் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். எனக்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் 20/08/2015 இல் திருமணமானது . பழனி கோவிலில் பதிவு செய்துள்ளோம். அதன் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் கோவிலில் போய் கேட்கவேண்டும்.

**முடிக்கப்பட்ட நேரம்:04.03**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)

Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.